*2*

# பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசுவின் போதனை

*“என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” (யோவா. 14:26).*

*பரிசுத்த ஆவியானவர் பற்றிய இயேசுவின் பெரும்பான்மையான உபதேசம், யோவான் சுவிசேஷத்தில் அடங்கியுள்ளது. அப்போஸ்தலர்கள் என்ன கூறவேண்டும் என்பதை அவர்களுக்கு ஆவியானவர் கூறுவார் என்ற வாக்குத்தத்தம், முதல் மூன்று சுவிசேஷங்களில் உள்ளடங்கியிருக்கிறது (மத். 10:19, 20; மாற். 13:11; லூக். 12:12). அவற்றில் பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான தூஷணத்தைப் பற்றிய எச்சரிக்கையும் உள்ளடங்கியிருக்கிறது (மத். 12:31, 32; மாற். 3:29; லூக். 12:10). மத்தேயு என்ற ஒரு சுவிசேஷத்தில், இயேசு தேவனுடைய ஆவியின் வல்லமையினால் அசுத்த ஆவிகளைத் துரத்துதல் பற்றிய வார்த்தைகள் பதிவாகியுள்ளன (12:28), மற்றும் ஞானஸ்நானம், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினுல் கொடுக்கப்பட வேண்டும் என்ற அவருடைய அறிவுறுத்தலும் பதிவாகியுள்ளது (28:19). இரண்டு சுவிசேஷங்கள், தாவீது பரிசுத்த ஆவியின் உதவி மூலமாகப் பேசினார் என்று வெளிப்படுத்துகின்றன (மத். 22:43; மாற். 12:36).*

## லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் கூற்று

*பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல் பற்றி இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூற்றை லூக்கா பதிவு செய்துள்ளார்: “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (லூக். 11:13). இவ்வசனமானது தன்னிலேயே, ஜெபத்தினால் மாத்திரமே ஒரு நபர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கருத்துத் தெரிவிப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும், மற்ற வசனப்பகுதிகளை ஆராய்ந்து பார்த்தலானது, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதற்கு ஜெபத்தைக்காட்டிலும் இன்னும் அதிகமானவை தேவைப்*

*படுகின்றன என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

*இதே போன்ற இன்னொரு கூற்று மத்தேயு சுவிசேஷத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது: "ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத். 7:11). தேவனிடத்திலிருந்து வரங்களைப் பெறுவதற்கு, கேட்பதைக் காட்டிலும் அதிகமானவைகள் அவசியம் என்று வேதவாக்கியங்களின் மற்ற வசனப் பகுதிகள் போதிக்கின்றனவா? "ஆம்!" என்பதே எதிரொலிக்கும் பதிலாக உள்ளது.*

*இயேசுவின் சீஷர்கள் தேவனிடத்தில், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத். 6:11). என்று கேட்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்குப் போதித்தார். அன்றாட உணவைப் பெறுவதற்கு ஒருவர் வெறுமனே அவரிடத்தில் கேட்டால் மாத்திரமே போதும், அது அவருக்குத் தரப்படும் என்று யார் வாதிடமுடியும்? நாம் நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேலை செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றோம். பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *திருடுகிறவன், இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன் (எபே. 4:28).*

> *ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம். ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம் (2 தெச. 3:8-12).*

*தேவன் தமது ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கின்றவர்களிடத்தில் தக்க வகையிலான செய்கைகளைக் கேட்கின்றார். தேவனிடத்திலிருந்து ஒரு வரத்தைப் பெறுவதற்கு, ஒருவர் இயேசுவின் நாமத்தினாலே கேட்க வேண்டும் (யோவா. 14:14), விசுவாசத்தோடே கேட்க வேண்டும் (யாக். 1:6, 7), சரியான விஷயங்களைக் கேட்க வேண்டும் (யாக். 4:3), தேவனுடைய சித்தத்தின்படியான வேண்டுகோள்களை ஏற்படுத்த வேண்டும்*

*(1 யோவா. 5:14), மற்றும் தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கிற அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் (1 யோவா. 3:22).*

*அதுபோலவே, நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவதற்கு முன்பு, தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதைப் பார்க்கிலும் அதிகமானவை நம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஜெபத்தினால் மாத்திரம் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபருக்கு அருளப்பட்டார் என்பதற்கான எந்த ஒரு உதாரணமும் வேதாகமத்தில் தரப்பட்டிருக்கவில்லை.*

## யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் போதனை

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இயேசு கூறியிருந்தவற்றில் எஞ்சியவைகள் யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் காணப்படுகின்றன. புதிய பிறப்பில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை (யோவா. 3:3-5) மற்றும் ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் (யோவா. 14:17) ஆகியவை மற்ற பாடங்களில் கலந்துரையாடப்படும்.[1] யோவான் 14:16, 17, 26; 15:26; 16:13 ஆகிய வசனங்களில் இயேசுவின் போதனையே இந்தப் பாடத்தில் கவனம் செலுத்தப்படும்.*

### காட்சியமைவு

*பரிசுத்த ஆவியானவர் பற்றி இயேசு கொடுத்த வாக்குத்தத்தத்திற்கான காட்சியமைவு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அந்த வேளையில் இயேசு எங்கிருந்தார்? அவருடன் இருந்தது யார்? அவர் யாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தார்?*

*இப்பொழுது நாம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும் இவ்விளக்கங்கள், இயேசுவும் அவரது சீஷர்களும் மேல்வீட்டில் பஸ்காவையும் கடைசி இராப்போஜனத்தையும் ஆசரித்து அங்கிருந்து கிளம்புமுன் கூறப்பட்டவைகளாய் இருந்தன. இயேசுவும் அவரது சீஷர்களும், ஒரு ஏழை விதவையின் எளிய காணிக்கையைக் கவனித்திருந்த இடமாகிய தேவாலயத்தை விட்டுப் புறப்பட்ட பின்பு (மாற். 12:41-44; லூக். 21:1-4), அவர்கள் ஒலிவ மலையை நோக்கி நடந்தார்கள் (மத். 24:3; மாற். 13:1-3). பஸ்கா நெருங்கிக் கொண்டிருந்த அவ்வேளையில் இயேசு, தமது சீஷர்களில் இருவரை (மாற். 14:13) பஸ்கா பண்டிகைக்கு ஆயத்தம் செய்வதற்காக நகரத்திற்கு (இது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இது எருசலேம் நகர்தான் என்பது தெளிவு) அனுப்பினார் (மத். 26:18; மாற். 14:14; லூக். 22:10, 11). அவர்கள் ஒரு விருந்து அறையை - சகல பொருட்களும் ஆயத்தம் பண்ணப்பட்ட ஒரு பெரிய மேல்வீட்டறை - அவர்கள் பஸ்கா உணவை உண்ணக் கூடிய இடத்தைக் குறித்து விசாரிக்கும்படி கூறப்பட்டார்கள் (மாற். 14:14, 15; லூக். 22:11, 12).*

*"சாயங்காலமனபோது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்" (மாற். 14:17). அதாவது, அப்போஸ்தலர்களுடன் இயேசு உணவு மேசையில் சாய்ந்தமர்ந்தார் (லூக். 22:14; மத். 26:20). பஸ்கா விருந்தின் போது அப்போஸ்தலர்கள் மாத்திரமே இயேசுவுடன் இருந்ததாக*

*அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இயேசுவின் இந்த உரையாடலின் காலவேளை பற்றிய கூற்றினை யோவான் கொடுத்தார், அது யோவான் 13-16ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பஸ்கா உணவு உண்ணப்படுவதற்கு முன்பு, இயேசு தாம் [இவ்வுலகத்தை] விட்டுப் புறப்படும்படியான வேளை வந்தது என்று அறிந்தார் என்பதாக யோவான் கூறினார் (யோவா. 13:1). "அவர்கள் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில், ... இயேசு ... போஜனத்தை விட்டெழுந்து" (யோவா. 13:2-4). இதை மற்ற சுவிசேஷங்களில் தரப்பட்டுள்ள தகவல்களுடன் இணைத்துப் பார்க்கும்போது, பஸ்கா உணவுவேளையில் அப்போஸ்தலர்கள் மாத்திரமே இயேசுவுடன் இருந்தனர் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள இயலும். தொடர்ந்து மேல்வீட்டில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் நிகழ்ச்சிகளிலும் அவர்கள் மாத்திரமே உள்ளடக் கப்பட்டனர். யூதாஸ் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பின்பு, பதினொருவர் மாத்திரம் அங்கிருந்தனர் (யோவா. 13:30). இந்த அப்போஸ்தலர்களுடன் வேறு யாரையேனும் சேர்த்துக் கற்பனை செய்தல் என்பது இந்தச் சூழ்நிலைக்கு மாறானதாக இருக்கும்.*

***உள்ளடக்கப்பட்ட மக்கள்***

*யோவான் 13-16ல் இயேசுவின் கூற்றுக்கள் அப்போஸ்தலர்களுக்கு உரைக்கப்பட்டவையாயிருக்கையில் அவர் அவற்றில், மக்களின் மாறுபட்ட குழுக்களைப் பற்றிக் குறிப்பிட்டார். (1) இயேசு, ''நீங்கள்'' என்று குறிப்பிட்டபோது, அவர் ஒவ்வொரு கிறிஸ்தவர்களையும் அல்ல, ஆனால் அப்போஸ்தலர்களையே அர்த்தப்படுத்தினார். இவ்விதமாக நாம், அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அதே விஷயங்களை மற்ற கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்க முடியும் என்று முடிவு செய்வதற்குப் புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைச் சார்ந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட வசனப்பகுதிகள் காணப்படாதிருந்தால், அந்த வாக்குத்தத்தம் அப்போஸ் தலர்களைத் தவிர வேறு யாருக்கும் ஏற்படுத்தப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். (2) இயேசு, "அவர்," "அவரை," "ஒரு மனுஷன்," அல்லது "அவர்கள்" என்று கூறியபோது, பொதுவாக அப்போஸ் தலர்களுடன் விசுவாசிகள் உள்ளடக்கப்பட்டார்கள் அல்லது (அப்போஸ் தலர்கள் இன்றி) மற்றவர்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டார்கள்.*

*"பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ..." (யோவா. 13:33). இந்த சந்தர்ப்பப் பொருளில், ''நீங்கள்'' என்று இயேசு கூறியபோது, அவர் அப்போஸ்தலர்களை மாத்திரம் அர்த்தப்படுத்தினார். இருப்பினும், அடுத்து "உங்களுக்கு'' (அப்போஸ்தலர்களுக்கு) உரைக்கப்பட்ட கூற்று முன்ன தாகவே யூதர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது: "... நான் யூதரோடே சொன்னது போல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்" (யோவா. 13:33). இவ்விடத்தில் இயேசு அப்போஸ்தலர்களுக்கு தனிப்பட்ட வகையில் பேசிக் கொண்டிருக்கையில், இதே சூழ்நிலையை அப்போஸ்தலர்கள் தவிர மற்ற மக்களும் எதிர்கொள்ளும் இன்னொரு சூழ்நிலையை அவர் சுட்டிக்*

*காண்பித்தார்.*

*"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவா. 13:34). இந்தக் கட்டளை அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்டது, ஆனால் புதிய ஏற்பாடு, இயேசுவைப் பின்பற்றுகின்ற யாவரும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறது (1 யோவா. 3:23).*

*"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" (யோவா. 14:21அ). இயேசு, தகுதிப்படுத்தும் சொற்றொடருடன், "அவன்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதன் மூலம், அப்போஸ்தலர்களை மாத்திரம் அல்ல ஆனால் தமது கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் எவரொருவரையும் உள்ளடக்கினார்.*

*"அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" (யோவா. 15:20ஆ). இவ்வசனப் பகுதியில், "அவர்கள்" என்ற வார்த்தை அப்போஸ்தலர்களைத் தவிர மற்றவர்களை அர்த்தப்படுத்துவதாக இருக்கையில் "நீங்கள்" என்பது அப்போஸ்தலர்களை மாத்திரம் அர்த்தப்படுத்துகிறது.*

*பின்வரும் உரைகள் அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டன:*

> *"அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன், நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை" (யோவா. 16:4).*
>
> *"நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள்," (யோவா. 16:16அ).*
>
> *"இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன், காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்" (யோவா. 16:25).*
>
> *"இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது," (யோவா. 16:32அ).*

*இந்த வேளைகளில் இயேசு "நீங்கள்" என்ற சொல்லைப் பயன்படுத்திய போது, அவர் அப்போஸ்தலர்களையே திட்டவட்டமாகக் குறிப்பிட்டார். இதே பலன்களை வேறு எவரும் எதிர்பார்க்க முடியும் என்று வேறு வேத வசனங்கள் எதுவும் சுட்டிக்காண்பிக்கவில்லை என்றால், இந்த உரைகள் அப்போஸ்தலர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுவதாய் இருக்கும் மற்றும் வேறு எவருக்கும் அல்ல. இது புரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான*

*கருத்தாக உள்ளது, ஏனென்றால் யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதியில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றிய இயேசுவின் வாக்குத்தத்தங்கள் அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே உரியவைகளாய் இருந்தன.*

**வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியானவர்**

*பரிசுத்த ஆவியானவரின் வருகை குறித்து இயேசுவின் வாக்குத்தத்த மானது அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் ஏற்படுத்தப்பட்டது (யோவா. 14:16-26; 15:26, 27; 16:7-15). இது இவ்வசனங்களின் சந்தர்ப்பப் பொருளினால் தெளிவாகிறது: "நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவா. 14:25); "நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர் கள்" (யோவா. 15:27); "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" (யோவா. 16:12). இயேசு யாருடன் தங்கியிருந்தாரோ, யார் சாட்சி உரைக்க வேண்டியிருந்ததோ, யார் அவரது ஊழியத்தின் தொடக்கம் முதல் அவருடன் இருந்தார்களோ, மற்றும் யார் அந்த வேளையில் அவரது முழுமையான போதனையைத் தாங்க இயலாத வர்களாய் இருந்தார்களோ, அவர்களுக்கு இந்தக் கூற்றுகள் உரைக்கப் பட்டது. இக்குறிப்புகள் அப்போஸ்தலர்களைச் சுட்டிக்காண்பிக்கின்றன.*

*ஆவியானவர் வரும்போது அவர் என்ன செய்வார் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்ததும் கூட, இதில் அப்போஸ்தலர்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவர், (1) அவர்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார், (2) இயேசு கூறிய யாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டுவார், (3) அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் மற்றும் (4) வரவிருக்குங் காரியங்களை அவர்களுக்குக் காண்பிப்பார் (யோவா. 14:26; 16:13).*

*இதே விஷயத்தை ஆவியானவர் இன்றைய நாட்களில் மக்களுக்குச் செய்தார் என்றால் என்ன நடக்கும்? (1) அவர்களுக்கு வேதாகமம் தேவைப்படாது. ஆவிக்குரிய வகையில் அவசியமான அறிவு யாவற்றையும் ஆவியானவரே அவர்களுக்கு அருளுவார். (2) அவர்கள் இயேசுவின் போதனையை வாசிக்கத் தேவைப்படாது. இயேசு கூறிய ஒவ்வொன்றை யும் ஆவியானவரே அவர்களுக்கு நினைப்பூட்டுவார். (3) அவர்கள் படிப்பதற்கான அடிப்படைக் காரணம் எதையும் கொண்டிருக்க மாட்டார் கள். ஆவியானவர் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். (4) அவர்கள் என்ன கூற அல்லது போதிக்க வேண்டும் என்பதை முன்னதாக ஆயத்தம் செய்யத் தேவை இராது. அவர்களுக்குச் சரியான வார்த்தைகளை ஆவியானவரே கொடுப்பார் (மத். 10:19, 20). (5) ஆவியானவரால் ஏவுதல் பெற்ற பவுலைப் போல் (கலா. 1:11, 12), அவர்களுக்கு அறிவுறுத்துதல் தேவைப்படாது, ஆனால் அவர்கள் ஆவியானவர் மூலம் இயேசுவிடமிருந்து நேரடியாகத் தங்கள் போதனையைப் பெற்றுக்கொள்ளுவார்கள் (எபே. 3:3-5). (6) அவர்களின் போதனையானது வேதாகமத்தை எழுதிய ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் போதனைக்குச் சமமானதாக இருக்கும்.*

வேதாகமத்தை எழுதியவர்களை வழிநடத்திய அதே ஆவியானவர் அவர்களையும் வழிநடத்துவார். (7) அவர்கள் தவறுகள் எதுவுமின்றி பேசவும் எழுதவும் கூடும். வேதாகமத்தை எழுதியவர்கள் தேவனுடைய [அந்தச்] செய்தியைத் தவறற்ற வகையில் எழுதுவதற்கு ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருந்தனர். நாம், இந்த உண்மையின் அடிப்படையில், வேதாகமம் முழுமையானது மற்றும் தவறற்றது என்ற விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியும். (8) அவர்கள் எதிர் காலத்தினுள் உற்றுப் பார்க்க முடிந்தவர்களாக, வரவிருப்பது என்ன என்பதை அறிந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் இன்றைய நாட்களில் தங்களை ஆவியியல் சார்ந்த வர்கள், உளம்சார் அறிஞர்கள் மற்றும் வருவதை உரைப்பவர்கள் என்று அழைத்துக்கொள்பவர்களைக் காட்டிலும் மிகத் துல்லியமாக முன்னுரைத் தல்களை ஏற்படுத்தக்கூடியவர்களாய் இருப்பார்கள்.

அப்போஸ்தலர்களுடன் தீர்க்கதரிசிகளும் வெளிப்படுத்துதல்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன (எபே. 3:3-5). இவர்கள் அப்போஸ்தலர்களின் கைகள் தங்கள்மீது வைக்கப்பட்ட தினால் ஆவியானவரின் வரங்கள் பொழியப்பட்டவர்களாய் இருந்தனர் (அப். 6:6). இவ்விதமாக, வசனமானது எழுத்து வடிவத்தில் கிடைக்கும் முன்பு, அது ஆவியானவரின் உதவியால் வாய்ச் சொல் மூலமாகத் தரப்பட முடிந்தது.

அப்போஸ்தலர்களுக்கு எல்லா விஷயங்களும் போதிக்கப்பட்டன, இயேசு பேசியிருந்த யாவையும் நினைப்பூட்டப்பட்டன, மற்றும் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டனர் என்றிருக்கையில், மற்றவர்கள் ஒரு பகுதி வெளிப்படுத்துதல் மாத்திரமே பெற்றுக்கொண்டனர் என்பதே அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசன வரங்களைப் பெற்றுக்கொண்ட மற்ற கிறிஸ்தவர்களுக்கும் இடையில் இருந்த வேறுபாடாகும். அவர்கள் அறிய வேண்டிய யாவற்றையும் ஆவியானவர் வெளிப்படுத்தியிருந்ததால், அப்போஸ்தலர்கள் சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு வேறு யாரையும் சார்ந்திருக்க வேண்டியிருந்தது இல்லை. மற்ற கிறிஸ்தவர்கள், அவர்களுக்கு சில சத்தியங்கள் வெளிப்படுத்தப் பட்டிருந்தாலும் அவர்கள் (யோவா. 14:26), முழுமையான வெளிப்படுத்துதலைப் பெறுவதற்கு அப்போஸ்தலர் களையே சார்ந்திருக்க வேண்டியிருந்தது (2 தீமோ. 2:2).

**தேற்றரவாளன்**

ஆவியானவரை ஒரு தேற்றரவாளன் (Gk.: *parakletos*) என்று இயேசு உரைத்தார்.

> [புதிய ஏற்பாட்டின்] மொழியியல் பின்னணியைச் சார்ந்திருந்த [யூதமார்க்கத்து அமைந்தவர்களின் இலக்கியத்தில்], இவ்வார்த்தை யானது சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்ட வகையில், சட்ட பூர் வமான அர்த்தம் கொண்டிருந்தது மற்றும் இது இன்னொருவர் முன்னிலையில் ஒருவருக்காகப் பேசும் வேறொருவரைக் குறிப்பிட்டது.[2]

> *பரிசுத்த ஆவியானவருக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட வகையில், இந்த கிரேக்க வார்த்தையானது எந்த ஒரு ஆங்கில வார்த்தையினாலும் போதுமான அளவு மொழிபெயர்க்கப்பட இயலாத அளவுக்கு வளம்மிக்க அர்த்தம் கொண்டுள்ளது.* KJV*யில் உள்ள* “Comforter” *என்பது, ஆறுதல் அளிப்பவர் மட்டுமல்ல ஆனால் பலப்படுத்தி, உதவி செய்து மற்றும் ஆலோசனை அளித்து என்ற முழுக்கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால் எந்த வார்த்தையையும் போல் திருப்தியளிப்பதாக உள்ளது, இது ஒரு சட்ட அதிகாரி தனது வாடிக்கையாளருக்கு சட்ட பூர்வமான ஆலோசனை அளித்தல் போன்ற அதிகாரத்துவம் உடையதாகும்.*[3]

*அப்போஸ்தலர்களுடன் இயேசு இருந்த வரையில், அவர்களுக்கு அவர் ஆலோசனையாளராக, உதவியாளராக மற்றும் தேற்றரவாளராக இருந்தார். இயேசு சென்ற பின்பு, அவரது இடத்தில் இருப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் வந்தார். இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு, “நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது … வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்” (யோவா. 14:16); “நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்” (யோவா. 14:18) என்று வாக்களித்திருந்தார். இயேசு தாமே அவர்களிடம் திரும்பி வருவதாக அர்த்தப்படுத்தவில்லை; மாறாக அவர், பரிசுத்த ஆவியானவர் மூலம் அவர்களிடத்திற்குத் திரும்பி வருவதாக அர்த்தப் படுத்தினார். பிற்பாடு அவர்களிடத்தில் இயேசு, “நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜன மாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்” என்று கூறினார் (யோவா. 16:7). இயேசு அவர்களிடத்திற்கு வந்த உதவியாளரான பரிசுத்த ஆவியாக இருக்க மாட்டார்; அவர் இன்னொரு தேற்றரவாளனை (யோவான் 14:16), பரிசுத்த ஆவியானவரை அவர்களுடன் இருக்கும்படிக்கு அனுப்புவார்.*

**காலம்**

*இயேசு உயிர்த்தெழுந்த அன்று மாலையில், தமது அப்போஸ்தலர் களின்மேல் ஊதினபின்பு கூறியது (யோவா. 20:19), அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் எப்போது வந்தார் என்பது குறித்துச் சிலரை வியப்படையச் செய்துள்ளது. அந்த வேளையில் இயேசு, “பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று கூறியிருந்தார் (யோவா. 20:22ஆ).*

*இதை நாம், இயேசுவினால் இந்த நிகழ்ச்சிக்குச் சற்று முன்னர், அவர் கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தியபோது அவரால் பேசப்பட்ட வார்த்தைகளைப் போலவே புரிந்துகொள்ள வேண்டும் என்பது தெளிவு. அவர், “இது பாவமன்னிப்புண்டாகும்படி, அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” (மத். 26:28) என்று கூறினார். இயேசு, தமது இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்னதாகவே,*

அது "சிந்தப்படுகிறது" என்று கூறினார். எதிர்கால நிகழ்ச்சிகளை, அவை நடைபெறுவதற்கு முன்னதாகவே அவைகள் ஏற்கனவே நடைபெற்று விட்டதாக இயேசு பேச முடிந்த வகையில் அவை நிச்சயமானவைகளாக இயேசு கண்டார் என்பது தெளிவு. இதே விஷயம் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதலைப் பற்றியும் உண்மையானதாக இருக்க வேண்டும்.

யோவான் சுவிசேஷத்தின்படி, இயேசு மகிமைப்பட்ட பின்பு பரிசுத்த ஆவியானவர் அருளப்பட வேண்டியதாயிருந்தது (யோவா. 7:39). இயேசு தமது மரணத்தின் மூலமாக மகிமைப்படுத்தப்பட இருந்ததாகக் கூறினார் (யோவா. 12:23, 24) மற்றும் அவரது மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய வற்றிற்குப் பின்பு அவர் தமது மகிமையில் பிரவேசிப்பதாயிருந்தார் (லூக். 24:26; பிலி. 2:8-11; 1 தீமோ. 3:16ஐயும் காணவும்).

இயேசு பரலோகத்திற்குத் திரும்பச் செல்லுவதற்கு சற்று முன்பு, அப்போல்தலர்கள் எருசலேமை விட்டுப் போகாதிருக்கும்படி அவர் கூறினார். அவர்கள் "சில நாட்களுக்குள்" (அப். 1:4, 5; லூக். 24:49ஐயும் காணவும்) பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறக் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. பத்து நாட்களுக்குப் பின்பு யூதர்களின் பண்டிகையான பெந்தெகொஸ்தேயன்று (அப். 2:1-4) ஆவியானவர் பலத்தோடே அவர்கள்மேல் வந்தார் (அப். 1:8). இயேசு அவர்கள்மீது ஊதியபோது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை.

## முடிவுரை

இயேசு தமது இடத்தில் அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியான வர் ஒரு தேற்றரவாளனாக இருப்பார் என்று வாக்குத்தத்தம் செய்ததன்மூலம் அவர்களைத் தமது பிரிவுக்கு ஆயத்தம் செய்தார். அவர்கள் இயேசு பிரிந்து சென்ற பின்பு திக்கற்றவர்களாக விடப்படுவதில்லை, ஆனால் ஆவியானவர் அவர்களுக்கு அருளப்படுவார். ஆவியானவர் மூலமாக இயேசு அவர்களுடன் தொடர்ந்து இருப்பார். இவ்வாறு அவர்களுக்கு அவர் ஆவிக்குரிய பலத்தைக் கொடுப்பார் மற்றும் அவர்கள் உலகெங்கும் சென்று சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது (மாற். 16:15) சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்.

---

குறிப்புகள்

[1]பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம், ஆவியானவரின் அற்புத வரங்கள், மனமாற்றம் மற்றும் ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுதல் ஆகியவை பற்றிய பாடங்களில் நாம், பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு முன்பு ஜெபத்தைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கும் வசனப்பகுதிகளைக் கலந்துரையாடுவோம். [2]P. K. Jewett, "*paraclete,*" *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* vol. 4, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan, 1975), 597. [3]"Advocate," *The New International Dictionary of the Bible,* eds. J. D. Douglas and Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan, 1987), 20.